# ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்

## வெற்றிடங்கள் - நிரந்தர ஊழியர் நியமனம்

### கற்கை மற்றும் கற்கை உதவி பணியாளர்கள்

**மருத்துவ பீடம்**

**ஆரம்ப மருத்துவத் துறை**

1. சிரேஷ்ட விரிவுரையாளர் பதவி வெற்றிடம் - தரம் I / II

**இயன் மருத்துவ துறை**

1. சிரேஷ்ட விரிவுரையாளர் பதவி வெற்றிடம் - தரம் I / II

**பொறியியல் பீடம்**

**மின், மின்னணு மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல் துறை**

1. சிரேஷ்ட விரிவுரையாளர் பதவி வெற்றிடம் - தரம் I / II, விரிவுரையாளர் (உறுதிப்படுத்தப்படாத)
2. பயிற்றுவிப்பாளர் பதவி - தரம் II

**வான்வெளிப் பொறியியல் துறை**

1. சிரேஷ்ட விரிவுரையாளர் பதவி வெற்றிடம் - தரம் I / II, விரிவுரையாளர் (உறுதிப்படுத்தப்படாத), விரிவுரையாளர் (தகுதிகாண்)

**முகாமைத்துவம், சமூக அறிவியல் மற்றும் மானிடவியல் பீடம்**

**சமூக அறிவியல் துறை**

1. சிரேஷ்ட விரிவுரையாளர் பதவி வெற்றிடம் - தரம் I / II, விரிவுரையாளர் (உறுதிப்படுத்தப்படாத), விரிவுரையாளர் (தகுதிகாண்)

**மொழியியல் துறை**

1. சிரேஷ்ட விரிவுரையாளர் பதவி வெற்றிடம் - தரம் I / II, விரிவுரையாளர் (உறுதிப்படுத்தப்படாத) விரிவுரையாளர் (தகுதிகாண்)

### தெற்கு பல்கலைக்கழகம் - சூரியவெவ

**கட்டமைக்கப்பட்ட சுற்றுச்சூழல் மற்றும் இடவியல் விஞ்ஞான பீடம்**

**மதிப்பீட்டு ஆய்வு துறை**

1. சிரேஷ்ட விரிவுரையாளர் பதவி வெற்றிடம் - தரம் I / II, விரிவுரையாளர் (உறுதிப்படுத்தப்படாத), விரிவுரையாளர் (தகுதிகாண்)

* விஷேட குறிப்பு : மதிப்பீட்டு ஆய்வு துறையில் விசேட பட்டப்படிப்பு பெற்றவர்கள் விரும்பப்படுவார்கள்.

**ஆங்கில மொழி கற்பிக்கப்படும் பிரிவு**

1. ஆங்கில மொழி பயிற்றுவிப்பாளர் பதவி - தரம் III

### எழுத்துசார் மற்றும் நிர்வாக ஊழியர்கள்

1. தொழில்நுட்ப அதிகாரி (இயந்திரவியல்) தரம் III
2. தொழில்நுட்ப அதிகாரி (மின்னியல்) தரம் III
3. தொழில்நுட்ப அதிகாரி (சிவில்) தரம் III
4. தொழில்நுட்ப அதிகாரி பதவி தரம் II (ஆ) பிரிவு

**சம்பள அளவுத்திட்டம்**

| | |
|---|---|
| 1. சிரேஷ்ட விரிவுரையாளர் பதவி தரம் I | :- U-AC 3 (I) ரூ. 91,310 - 7x2,170 - 106,500 p.m. + (151% கல்விசார் கொடுப்பனவு + ஏனைய கொடுப்பனவுகள்) |
| 2. சிரேஷ்ட விரிவுரையாளர் பதவி தரம் II | :- U-AC 3 (II) ரூ. 79,360 - 11x1,630 - 97,290 p.m. + (151% கல்விசார் கொடுப்பனவு + ஏனைய கொடுப்பனவுகள்) |
| 3. விரிவுரையாளர் பதவி (உறுதிப்படுத்தப்படாத) | :- U-AC 3 (III) ரூ. 69,580 - 5x1,630 - 77,730 p.m. + (131% கல்விசார் கொடுப்பனவு + ஏனைய கொடுப்பனவுகள்) |
| 4. விரிவுரையாளர் பதவி (தகுதிகாண்) | :- U-AC 3 (IV) ரூ. 54,600 - 10x1,335 - 67,950 p.m. + (115% கல்விசார் கொடுப்பனவு + ஏனைய கொடுப்பனவுகள்) |
| 5. பயிற்றுவிப்பாளர் பதவி தரம் II | :- U-AS 1 (I) ரூ. 48,385 - 19x690 - 61,495 p.m. + (ஏனைய கொடுப்பனவுகள்) |
| 6. ஆங்கில மொழி பயிற்றுவிப்பாளர் பதவி தரம் III | :- U-AS 1 (II) ரூ. 41,095 - 18x660 - 52,975 p.m. + (ஏனைய கொடுப்பனவுகள்) |
| 7. தொழில்நுட்ப அதிகாரி பதவி தரம் III /II (ஆ) பிரிவு | :- U-MT 1 (IIIA) ரூ. 31,625 - 07x300;10x355 - 37,275 p.m. + (ஏனைய கொடுப்பனவுகள்) |

**ஏனைய பிரதிபலன்கள் :**

தகைமைப்பெற்ற பதவிகளுக்காக கடமை ஓய்வு விடுமுறை, ஊக்குவிப்பு கொடுப்பனவுகள், இலவச சுகாதார காப்புறுதிகள், வருடாந்த ஊக்குவிப்பு காப்புறுதிகள், பணியாளர்களது குழந்தைகளுக்கான புலமைப்பரிசில்கள், பல்கலைக்கழக வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் பொழுது முன்னுரிமை வழங்கல் மற்றும் மேலும் ஏனைய வரப்பிரசாதங்கள்.

**அனைத்து நிர்வாக ஊழியர்களுக்கான பொது நிபந்தனைகள்**

1. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பதாரிகளை தெரிவு செய்தல், குறித்த பதவிகளுக்கு / தரங்களுக்கேற்ப அனுமதிக்கப்பட்ட வெற்றிடங்களின் இடைவெளி பூரணப்படுத்தல் என்பன ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக முகாமைத்துவ சபையினால் மேற்கொள்ளப்படும்.
3. விண்ணப்பதாரிகளால் இணையத்தளத்தில் (www.kdu.ac.lk) இருந்து தரவிறக்கம் செய்த விண்ணப்பத்தினை உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்டு தொடர்புடைய சான்றிதழ்களின் நகல் பிரதியுடன் 2022.08.31 ஆம் திகதிக்கு முன்னர் பதிவாளர், ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம், இரத்மலானை எனும் முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் அல்லது நேரடியாக கையளித்தல் அல்லது (staffrecruit@kdu.ac.lk) எனும் மின்னஞ்சல் முகவரிக்கு ஊடுகதிர் செய்யப்பட்ட நகல் பிரதிகளை அனுப்பி வைத்தல் வேண்டும்.
4. கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடல் வேண்டும். மின்னஞ்சல் மூலம் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் மின்னஞ்சல் பொருள் வரிசை தலைப்பில் “விண்ணப்பிக்கும் பதவி மற்றும் திணைக்களம்” என்பவற்றை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.
5. விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கும் ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.
6. பல்கலைக்கழகங்கள் / நிறுவனங்கள் / அரசு துறைகள் / நிறுவனங்கள் அல்லது சட்டப்பூர்வ வாரியங்களில் பணிபுரியும் விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை நிறுவனத்தின் தலைவர் மூலம் சமர்ப்பிக்க வேண்டும்.
7. கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக இணையத்தளத்தில் (www.kdu.ac.lk) தரவிறக்கம் செய்துகொள்ள முடிந்த விண்ணப்பப்படிவத்தின் மூலமாக மாத்திரமே குறித்த பதவிகளுக்கு விண்ணப்பிக்க முடியும். பிந்திக்கிடைக்கும், பூரணப்படுத்தப்படாத அல்லது மேலே இலக்கம் 06 குறித்த மாதிரிக்கமையாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
8. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு இப்பல்கலைக்கழகத்தின் எந்தவொரு வளாகத்திலும் சேவையாற்றுவதற்கு மற்றும் பணியாற்றுவதற்கு ஆற்றல் இருத்தல் வேண்டும்.
9. குறித்த தகைமைகளைப் பூரணப்படுத்திய விண்ணப்பதாரிகள் மாத்திரமே போட்டிப் பரீட்சை அல்லது நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்படுவர்.
10. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அடிப்படையில் இணைத்துக்கொள்ளல், பதவி உயர்வு நடைமுறைக்கிணங்க மற்றும் நேர்முகத்தேர்வு அல்லது போட்டிப்பரீட்சை பெறுபேறுகளுக்கு ஏற்ப விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்படுவர்.
11. விண்ணப்பதாரிகள் நேர்முகத்தேர்வுக்கு அல்லது போட்டிப் பரீட்சைக்கு அழைப்பதற்கு முன்னர் அவர்களது பெயர் பட்டியலை தயாரிக்கும் உரிமை பல்கலைக்கழகத்திற்கு உண்டு.
12. பல்கலைக்கழக மானிய ஆணையக்குழுவினால் வெளியிடப்படும் சம்பள படிவத்திற்கமைய சம்பளம் வழங்கப்படுவதுடன் சம்பளத்திற்கு மேலதிகமாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட ஏனைய மேலதிக கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

**கற்கை ஊழியர்களுக்கான பொது நிபந்தனைகள்**

1. கற்கை பதவிக்கான விண்ணப்பதாரர்கள் தமது கற்பித்தல் திறனை உறுதி செய்வதற்காக தேர்வாளர் குழுவினர் முன்னிலையில் விளக்க காட்சியொன்றினை (ஆங்கில மொழியில்) செயற்படுத்த வேண்டும்.
2. விண்ணப்பதாரிகள் தமைமைகள் மற்றும் பாடத்துறை தொடர்பாக அறிந்துக்கொள்ள பல்கலைக்கழக இணையத்தளம் (www.kdu.ac.lk) மற்றும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் படிமுறை 721, 08/2016, 08/2016 (ii), 08/2016 (iii), 07/2018, 14/2017 மற்றும் அவற்றின் விசேட குறிப்புகள் மற்றும் குறித்த சட்டங்களை சரிபார்க்கவும்.

**எழுத்துசார் மற்றும் அனைத்து தர நிர்வாக ஊழியர்களுக்கான பொது நிபந்தனைகள்**

1. விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிப்பதற்கான தகைமைகளை அறிய ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் இணையத்தளம் மற்றும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் சுற்றுநிருபம் 763 மற்றும் 05/2022 ல் உள்ளடக்கப்பட்டுள்ள விசேட குறிப்புகள் மற்றும் ஆலோசனைகளை சரிபார்க்கவும்.

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி :**

பதிவாளர்
ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்
இரத்மலானை 10390, இலங்கை
மின்னஞ்சல் : staffrecruit@kdu.ac.lk

மேலதிக விபரங்களுக்கு பிரவேசிக்கவும் :
www.kdu.ac.lk